பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை 28.09.2025 கதிர் 322

**இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நேற்று ஒரு செய்தியாளர் சந்திப்பை நடத்தியிருந்தார். மன்னாரில் காற்றாலை எதிர்ப்புப் ☞ 2

# மன்னாரில் அரச பயங்கரவாதம்

## போராட்டம் நடத்திய மக்கள் மீதான பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து கஜேந்திரகுமார் அறிக்கை

**மன்னாரில் காற்றாலையை எதிர்த்துப் போராட்டம் நடத்திய மக்கள மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தியிருப்பது அரச பயங்கரவாதமே அன்றி வேறில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். பொலிஸாரின் செயலைத் தமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.**




**மன்னார் தீவிற்குள் காற்றாலைகள் அமைப்பதற்கான இரண்டாவது திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக காற்றாலை உபகரணங்கள் கொண்டு வரப்பட்டபோது ஒரு மாதத்திற்கு முன்னர் மக்கள் வழிமறிப்புப் போராட்டம் செய்ததுடன் தொடர்ச்சியான போராட்டங்களிலும்** ☞ 2

# மன்னாரில் பொது மக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதற்குக் கடும் கண்டனம்

### காவிந்த ஜயவர்த்தன எம்.பி. சீற்றம்

மன்னார் காற்றாலை விவகாரத்தில் ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளது. அந்த பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் மதத்தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையாக கண்டித்தக்கது என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்;ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

மன்னார் காற்றாலைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியது தொடர்பிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதானிநிறுவனத்துடனானமன்னார்காற்றாலைத் திட்டத்தை கடந்த ஆளும்தரப்பு கைச்சாத்திட்டது. ☞ 6

# ஜப்பானின் ஒசாகா நகரை நேற்று சென்றடைந்த அநுர



ஜப்பான் அரசின் அழைப்பின் பேரில் அங்கு சென்றுள்ள அரசுத் தலைவர் அநுரகுமார ☞ 6

# போதைப்பொருள் சார்ந்த செயல்களை கட்டுப்படுத்த தேசிய வேலைத்திட்டம்

### ஓரிரு வாரங்களில் தொடக்கம் என்கிறார் அமைச்சர்

நாட்டில் போதைப்பொருளுடன் தொடர்புடைய செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதை ஆளும்தரப்பின் சிறந்த வேலைத்திட்டமாக முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொது ☞ 2

# 5 மாணவர்களின் படுகொலைக்கு நீதி கேட்டு 20 வருடம் போராடிய மருத்துவருக்கு அஞ்சலி

2006 இல் திருகோணமலை கடற்கரையில் நடைபெற்ற ஐந்து மாணவர்கள் படுகொலைக்கான நீதியைக்கோரி 20 வருடங்களாகப் போராடி வந்த - கொலையுண்ட மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தையான மருத்துவர் மனோகரனின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று திருகோணமலை நகர சபை பொது மண்டபத்தில் நடைபெற்றது.

'சர்வஜன நீதி' என்ற அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ☞ 2

### இலங்கையில் உள்ள மனிதப் புதைகுழிகள் குறித்து

# சர்வதேசத்துடன் இணைந்து தடயவியல் விசாரணைகள்

### ஜெனிவாவில் ஆளும்தரப்பு அறிவிப்பு

மனிதப் புதைகுழிகள் விவகாரத்தில் சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. வலிந்து காணாமல்போனவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 29 ஆவது அமர்வில் கலந்துகொண்ட நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இந்த அமர்வு செப்டெம்பர் 22 ஜெனிவாவில் தொடங்கிகிய நிலையில், இலங்கை தொடர்பான விவகாரம் செப்டெம்பர் 26 ஆராயப்பட்டது. இதில் இலங்கை சார்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான குழு கலந்துகொண்டது.

மனிதப்புதைகுழி... காணாமல் ஆக்கப்பட்டோர் ☞ 2

# திருகோணமலையில் காணிகள் விடுவிப்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தப் பணிப்பு

திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு தொடர்பில் முக்கிய கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

அயலுறவுத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பதில் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, பதில் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்த ஆகியோர் தலைமை வகித்தனர். முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.

இக்கலந்துரையாடலின் தொடக் கத்தில் திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பாதுகாப்பை வலுப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து, ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் கண்டித்து நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பு அது. அதில் கவனத்திற்குரியது என்னவென்றால் தமிழ் அரசுக் கட்சியின் பெயரை அவர் ஒரு இடத்திலும் நேற்று இழுக்காததுதான்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னர் அவர் தமிழ் அரசுக் கட்சியின் பெயரை இழுக்காமல் அல்லது சுமந்திரனின் பெயரை இழுக்காமல் ஒரு செய்தியாளர் சந்திப்பு நடத்தினார் என்றால் அது அதிசயம் என்ற நிலைதான். அதனால்தான் அதனை தனியாகக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியைவிட தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக அரசியல் செய்வதுதான் அவரது ஒரே குறிக்கோள் என்பதால், ஒவ்வொரு செய்தியாளர் சந்திப்பிலும் அவர் தமிழ் அரசுக் கட்சியை வசைபாடாமல் விட்டதில்லை.

கடந்த வாரம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்கூட தமிழ் அரசுக் கட்சியின் பெயரைத்தான் மந்திர உச்சாடனம் போன்று உச்சரித்துக் கொண்டிருந்தார். போதாததற்கு தமிழ்த் தேசியம் பேசுகின்ற எல்லாக் கட்சிகளுக்கும் சுமந்திரன்தான் பொது எதிரி என்று வேறு கடந்த வாரம் அவர் பிரகடனப்படுத்தியுமிருந்தார்.

நேற்றைய சந்திப்பில் தமிழ் அரசுக் கட்சியின் பெயரை அவர் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்றாலும் நடுவில் அவரது கட்சிசெயலாளர்கஜேந்திரன்எடுத்துக்கொடுக்க, தமிழ் அரசுக் கட்சியை மறைமுகமாகச் சாடும் வகையில் ஒரு கருத்தைச் சொல்லவும் அவர் தவறவில்லை. மழைவிட்டும் தூவானம் விடாது என்பார்களே அதுபோன்று!

அதாவது அபிவிருத்தி என்ற பெயரில் தேசிய மக்கள் சக்தி தமிழ்த் தேசத்திற்கு எதிரான திட்டங்களை தனது வருடாந்த நிதி நிலை அறிக்கையின் (வரவு செலவுத் திட்டம்) ஊடாகவே செய்கிறது. அதனால் என்பிபி ஆளும்தரப்பின்நிதிநிலைஅறிக்கையைஎதிர்க்க வேண்டும் என்று தெரிவித்தார். வழக்கமான தனது குத்திக்காட்டும் குணத்தின்படி நடுநிலை என்றோ, ஆதரிக்கவில்லை என்றோ தெரிவிக்காமல் வரவு செலவுத் திட்டத்தை வடக்கு கிழக்கைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்களும்எதிர்க்கவேண்டும்என்றார். இந்தக் குத்தல் கதை தமிழ் அரசுக் கட்சிக்கும் சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவிற்கும் உரியது. ஏனெனில் இந்த இரு தரப்பினரும் நாடாளுமன்றத்தில் என்பிபி ஆளும்தரப்பின் 2025 வரவு செலவுத் திட்டத்தில் வாக்களிக்காதவர்கள்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை கஜேந்திரகுமார் ஆதரித்தார். ஆனால் அவரது கொள்கைக் கூட்டாளியான செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்தை முழுமையாக ஆதரித்தார். அதாவது வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகக் கிடைத்த ஒரேயொரு வேறு கட்சி வாக்கு செல்வம் அடைக்கலநாதனுடையதுதான். 158 வாக்குகள் என்பிபியினருடையது.

அப்படி என்பிபியினருக்கு ஆதரவாக வாக்களித்த செல்வம் அடைக்கலநாதனைத் தனது கொள்கைக் கூட்டாளியாக ஏற்றுக்கொண்டு தமிழ்த் தேசியப் பேரவை என்ற அரசியல் கூட்டணியைக் கொண்டுள்ள கஜேந்திரகுமார் செல்வம் அடைக்கலநாதன் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்தது குறித்து வாயே திறக்காமல், ஆதரிக்கவில்லை என்று கூறாமல் எதிர்க்கவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியைக் குத்துகின்றார்.

இதனால்தான் நான் எப்போதும் சொல்வது, அவருக்கு என்பிபியை எதிர்ப்பதைவிட தமிழ் அரசுக் கட்சியை எதிர்ப்பதுதான் தலையாய அரசியல் என்பது. தமது குடும்பக் கட்சியில் பாட்டனின் தலைமையில் இருந்து வெளியேறி தனியே கட்சி அமைத்து, அதையே தமிழர்களின் தனிக் கட்சியாகவும் வளர்த்து தன்னையும் தமிழர்களின் தனிப் பெரும் தலைவனாக வளர்த்துக் கொண்ட செல்வநாயகத்தின் கட்சியைப் பார்க்கும்போதும், இன்னும் அதுவே தமிழர்களின் தனிப் பெரும் பிரதிநிதியாக இருப்பதைப் பார்க்கும்போதும் அவருக்கு ஆத்திரமும் கோபமும் அதனை அழித்தே ஆகவேண்டும் என்கிற வெறியும் வருவது இயல்புதானே. அதைவிட முக்கியமான வேறு என்ன அரசியல் இருக்க முடியும்?.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## ஹிட்லருக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர். இதையடுத்து அந்தப் பணிகளை இடைநிறுத்த உத்தரவிட்ட அரசுத் தலைவர் அநுரகுமார, மக்களுடன் பேசி இது தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்கும்படி பணித்திருந்தார்.

ஆளும்தரப்பால் அனுப்பப்பட்ட குழுவினருடனான பேச்சுக்களில் மக்கள் இந்தத் திட்டம் மன்னாரிற்குள் வேண்டாம் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர். ஆனால் ஆளும்தரப்புக் குழுவினரோ அந்தத் திட்டத்தை மக்களை ஏற்கப்பண்ணுவதற்கான முனைப்பிலேயே இருந்தனர். இருப்பினும் மக்கள் திட்டவட்டமாக காற்றாலைத் திட்டம் தமது இருப்புக்கு உலை வைக்கும் என்பதால் அதை எதிர்ப்பதாகத் தெரிவித்தனர்.

பின்னர் கொழும்பிற்கும் சென்று இந்தத் திட்டம் வேண்டாம் என்று போராட்டம் நடத்தினர். அப்படியிருந்தும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான தடைகள் எவையும் இல்லை என்று அரசுத் தலைவரின் செயலாளரால் மன்னார் மாவட்டச் செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து காற்றாலைக்கான உபகரணங்கள் வெள்ளிக்கிழமைஇரவு10மணிமுதல்மீண்டும் மன்னார் தீவிற்குள் எடுத்துவரப்பட்டன.

உபகரணங்களை எடுத்து வந்த வாகனங்களை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். முதலாவது வாகனம் மக்களின் எதிர்ப்பை மீறி மன்னார் தீவிற்குள் சென்றதை அடுத்து நள்ளிரவில் வந்த இரண்டாவது வாகனத்தை முன்னேறவிடாது மக்கள் வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து பொலிஸார் அவர்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்தினர். ஆண்கள், பெண்கள், அருட்தந்தையர்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் மிலேச்சத்தமாகத் தாக்கப்பட்டனர். இதில் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பொதுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியமை உட்பட பல சட்டப்பிரிவுகளின் கீழ் போராட்டக்காரர்களைக் கைது செய்வதற்கும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரின் தாக்குதல் அரச பயங்கரவாதம் என்று கண்டித்தார்.

மன்னாரில் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் மன்னார் தீவை முற்றுமுழுதாக அழிக்கக்கூடிய ஆபத்துக்கள் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தப்படக்கூடிய தகவல் இருக்கின்றன. அதனாலேயே மன்னார் மக்கள் தமது இருப்பையும் தமது மண்ணையும் காப்பாற்றப் போராடுகின்றனர். ஆனால் ஏற்கனவே இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகச் சொல்லி, இந்தத் திட்டங்கள் மூலம் பெரும் வருமானம் கிடைக்கும் என்பதைக் காரணமாகக் காட்டி காற்றாலைத் திட்டத்தை தொடர ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது. மக்களின் விருப்பத்திற்கு மாறாக அந்த மக்களின் இருப்பை அழிக்கின்ற திட்டங்களைத் தொடருவதற்கு முடிவெடுக்கப்பட்டு, அதற்கெதிராகப் போராடும் அந்த மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவது அரச பயங்கரவாதமே தவிர வேறு எதுவுமில்லை என்றார் கஜேந்திரகுமார்.

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் வாக்குறுதிகள் வெறும் வார்த்தைகள் மட்டுமே. அதன் செயற்பாடு தமிழ் தேச மக்களுக்கு எதிரானதாக அமைந்துள்ளது. தமிழ்த் தேசத்தின் வேணாவை அழிக்கின்ற வகையிலேதான் இந்த ஆளும்தரப்பினுடைய அனைத்துச் செயற்பாடுகளும் இதுவரைக்கும் இருந்திருக்கின்றது. அது தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக இருக்கலாம், தமிழ் மக்களின் அபிவிருத்தி நோக்கிய சிந்தனையாக இருக்கலாம் அனைத்துமே தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற விடயங்களாகவே இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் மயிலத்தமடு மாதவணைப் பகுதிகளிலும் அபிவிருத்தி என்ற பெயரில் மாதுரு ஓயா வலது கரை மேம்பாட்டுத் திட்டத்தை இந்த ஆளும்தரப்பு முன்னெடுக்கின்றது. இந்த மேய்ச்சல் தரைகள் தமிழ் மக்களின் கால்நடைகளுக்கு உணவளிக்கும் இடங்களாக இருந்த நிலையில், அரசின் திட்டத்தை எதிர்த்து மக்கள் நீண்ட நாள்களாகப் போராடி வருகின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலேயே இந்தப் போராட்டம் தொடங்கிவிட்டது. அந்தப் போராட்டத்திற்கு அப்போது எதிர்க் கட்சியாக இருந்து ஆதரவு வழங்கிய தேசிய மக்கள் சக்தி, ஆட்சிக்கு வந்ததும் தனது முதலாவது நிதிநிலை அறிக்கையிலேயே அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி அதனைத் தொடர்வதாக அறிவித்தது.

தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்பாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நடந்துகொள்வது ஒன்று, அதிகாரத்திற்கு வந்ததும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாகத்தான் நடந்துகொள்கிறது. மன்னாரில் நடந்த சம்பவம் அதற்கு மற்றொரு உதாரணம்.

இத்தகைய பின்னணியில் மன்னாரில் போராடி வரும் பொது அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் எமது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்கள் முடிவெடுத்து மன்னார் மாவட்டத்தையும் குறிப்பாக மன்னார் தீவையும் காப்பாற்றுவதற்கு எடுக்கப்போகின்ற அத்தனை செயற்பாடுகளுக்கும் எங்களுடைய நிபந்தனையற்ற ஆதரவையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

அரச பயங்கரவாதத்தினாலே பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த அரச பயங்கரவாதத்திற்கு எதிராக அனைத்துத் தரப்புக்களும், குறிப்பாக மன்னார் ஆயர், கத்தோலிக்கத் திருச்சபையினர், சைவ சமய அமைப்புக்கள், முஸ்லிம் மதகுருக்கள், அனைவரும் இணைந்து இந்த அரச பயங்கரவாதச் செயற்பாட்டை எதிர்க்கவேண்டும். அதற்கு எமது முழு ஒத்துழைப்பும் இருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# லஞ்ச, ஊழலுடன் அதிக தொடர்புடைய 10 இடங்களில் முதலிடம் பொலிஸுக்கு

## ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் அதிகளவில் தொடர்புடைய முதல் 10 பொது சேவைகளில் பொலிஸ் முதலிடம் வகிக்கிறது. அரசியல்வாதிகள், சுங்கம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், பாடசாலைகள், அமைச்சுக்கள் என முக்கிய நிறுவனங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்த நிலைமை மாற்றப்பட்டால் மாத்திரமே இலஞ்ச, ஊழல் அற்ற நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணைகள் தொடர்பான ஆணைக்குழுவின் தலைவர் நீல் இத்தவெல தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் நிலைப்பாட்டுக்கமைய இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் அதிகளவு தொடர்புடையது பொலிஸார் என எம்மால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் தொடர்புடைய பட்டியலில் முறையே பொலிஸார், அரசியல்வாதிகள், சுங்கம், குடிவரவு குடியகல்வு திணைக்களம், பாடசாலைகள், அமைச்சுக்கள், காணி பதிவு அலுவலகம், மாகாணசபைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், பிரதேச செயலகம், பதிவாளர் நாயக அலுவலகம் மற்றும் நீதிமன்றம் என்பன காணப்படுகின்றன.

மக்களின் நிலைப்பாட்டுக்கமைய இவை இலஞ்சம் அல்லது ஊழல் என்பவற்றுடன் தொடர்புடைய முதல் 10 நிறுவனங்களாகக் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய 5 பிரதான நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது சுங்க திணைக்களம், இரண்டாவது உள்நாட்டு வருமான திணைக்களம், கலால் வரி திணைக்களம், குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் மோட்டார் வாகன பதிவு திணைக்களம் என்பன முறையே முதல் 5 இடங்களில் உள்ளன.

இவை தவிர மேலும் பல நிறுவனங்கள் பண சுத்தீகரிப்பிற்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுகின்றன. எம்மால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆய்வில் ஊழல், மோசடிகு ஏதுவான காரணிகளாக மக்கள் கூறியவற்றில் பல முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன.

அதற்கமைய நாட்டில் சட்டம், அமைதி முறையாக நடைமுறைப்படுத்தப்படாமை, மோசடி கலாசாரம் நாட்டில் தலைதூக்கியுள்ளமை, அரச சேவையில் வழங்கப்படும் மிகக்குறைந்த சம்பளம், இலஞ்சம் , ஊழல் தொடர்பில் மக்கள் உரிய நடவடிக்கை எடுக்காமை என்பனவாகும். எனவே இவற்றை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் கடுமையாக எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# தமிழர்களுக்கு பன்னாட்டு நீதி கேட்டு 3ஆவது நாளாகப் பட்டினிப் போராட்டம்

*இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரித்து தமிழின அழிப்பு, வலிந்து காணமால் ஆக்கப்பட்டமை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித புதை குழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டம் சனிக்கிழமை (27) மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது.*

*வலிந்து காணமால் ஆக்கபட்பவர்களின் உறவுகளின் சங்கத்தினால் இந்த உண்ணாவிரத போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு சுழற்சி முறையில் நடைபெற்று வருகிறது.*

*இந்த உண்ணாவிரத போராட்டத்தில் மன்னார் மாவட்ட காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள், இளைஞர்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.*

*இந்த சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டமானது எதிர் வரும் முதலாம் திகதி வரை மாவட்ட ரீதியில் தொடர்ந்து இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.*

## மின்சார சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் பங்கேற்கும் தரப்புக்கள் உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்துவதற்கான தீவிரமான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அதனையடுத்து, முப்படைகளிடமுள்ள தனியார் காணிகளை படிப்படியாக விடுப்பது சம்பந்தமாக ஆராயப்பட்ட நிலையில் குறித்த காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை தாமதமின்றி முன்னெடுக்குமாறு பதில் அமைச்சர் அருண் ஹேமசந்திரா வலியுறுத்திய நிலையில், விரைந்து உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று பாதுகாப்பு துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இனவழிப்பு நோக்கத்திற்கான ஆதாரங்களை திரட்டாத ஐ.நா. தீர்மானத்தால் பயனேயில்லை

## வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி தெரிவிப்பு

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் மாத்திரம் இக்கூட்டத்தொடரில் காலநீடிப்பு செய்யப்படுமாக இருந்தால், போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு அப்பால் இனவழிப்பு மற்றும் இனவழிப்பு நோக்கம் என்பன தொடர்பிலும் ஆதாரங்களைத்திரட்டுவதற்கு ஏதுவானவகையில் அச்செயற்திட்டம் மேம்படுத்தப்படவேண்டும். அன்றேல் எந்தவொரு முன்னேற்றமும் இன்றி, உள்ளகப்பொறிமுறைகளினால் ஏற்கனவே ஏமாற்றமடைந்திருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மேலும் ஏமாற்றுவதாகவே அது அமையும் என வடமாகாண முன்னாள் அமைச்சரும், வலிந்து காணாமலாக்கப்படலால் பாதிக்கப்பட்டவருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரின் பக்க நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவ்விவகாரத்தை அணுகுவதற்கு அவ்விடயம் சார்ந்து முழுமையான நியாயாதிக்கத்தையும், சுதந்திரத்தையும் கொண்டிருக்கக்கூடிய சர்வதேச விசாரணைப்பொறிமுறையொன்று அவசியமாகும். அத்தகைய பொறிமுறையின் ஊடாக மாத்திரமே சர்வதேச நீதியை நிலைநாட்டுவதற்கு அவசியமான சாட்சியங்களைத் திரட்டமுடியும்.

நான் இங்கு பாதிக்கப்பட்ட தரப்பினர் என்ற ரீதியில் பேசுகிறேன். போரின் இறுதி நாளில் எனக்கும், எனது பிள்ளைகளுக்கும் முன்னால் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த எனது கணவர் காணாமல்போனார். 16 வருடங்கள் கடந்து இன்றும் நாம் உண்மைக்காகவும், நீதிக்காகவும் காத்திருக்கிறோம். எமது தாயகப் பகுதிகளில் தொடரும் இராணுவமயமாக்கம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் அத்துமீறல்கள் என்பன உள்ளகப் பொறிமுறைகள் மீது பாதிக்கப்பட்ட தரப்பினர் நம்பிக்கை இழப்பதற்கு வழிகோலியிருக்கிறது.

இக்கூட்டத்தொடரில் வெறுமனே இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம் மாத்திரம் காலநீடிப்பு செய்யப்படுமாக இருந்தால், போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு அப்பால் இனவழிப்பு மற்றும் இனவழிப்பு நோக்கம் என்பன தொடர்பிலும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஏதுவான வகையில் அச்செயற்திட்டம் மேம்படுத்தப்படவேண்டும். அன்றேல் எந்தவொரு முன்னேற்றமும் இன்றி, உள்ளகப்பொறிமுறைகளினால் ஏற்கனவே ஏமாற்றமடைந்திருக்கும் பாதிக்கப்பட்ட தரப்பினரை மேலும் ஏமாற்றுவதாகவே அது அமையும் எனச் சுட்டிக்காட்டினார்.




# பிரான்ஸ் ஏற்பாடு செய்த நிகழ்வில் அநுர பங்கேற்பு

தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் சமுத்திர உயிரியல் பல்வகைமையின் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பான சமுத்திர சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடன உடன்படிக்கையில் 60 ஆவது உறுப்பு நாடு இணைந்ததை முன்னிட்டு, பிரான்ஸ் அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை பிரான்ஸ் அரசுத் தலைவர் இமானுவேல் மெக்ரோன் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் அரச தலைவர்களின் பங்கேற்புடன் நியுயோர்க் நகரில் நடைபெற்றதுடன், இந்த உடன்படிக்கையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடான இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசுத் தலைவர் அநுரகுமார வும் அதில் கலந்துகொண்டார்.

இந்த உடன்படிக்கையில் இணைந்த 58 ஆவது உறுப்பு நாடாக, இலங்கை 2025 செப்டெம்பர் 16 ஆம் திகதி இந்த உடன்படிக்கையில் இணைந்ததுடன், இதன் மூலம் இந்த உடன்படிக்கையின் தரப்பு நாடாக மாறியது.

இரண்டு தசாப்த கால பேச்சுக்களுக்குப் பிறகு, தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் சமுத்திர உயிரியல் பல்வகைமை தொடர்பான உடன்படிக்கை என்று அழைக்கப்படும் இந்த உடன்படிக்கையில் தற்போது 60 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதுடன், அது அந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வர வழிவகுத்தது.

உலக சமுத்திரங்களில் 2/3 பகுதியை உள்ளடக்கிய இந்த உடன்படிக்கை ஊடாக சமுத்திர உயிரியல் பல்வகைமையினைப் பாதுகாக்கவும், நிலைபேறான பயன்பாட்டிற்கும், சுதேச அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் அந்த உயிரியல் பல்வகைமையின் பயனைப் பகிர்ந்து கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த உடன்படிக்கை 2026 ஜனவரி 17 உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வரவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் அரச பயங்கரவாதம்

**மன்னாரில் காற்றாலை மற்றும் கனிம மணல் அகழ்வு திட்டங்களை எதிர்த்து மக்களும் சமூக, மதத் தலைவர்களும் இணைந்து நடத்திய போராட்டம் நேற்று புதிய திருப்பத்தை எட்டியது. தமது வாழ்வையும், நிலத்தையும், சுற்றுச்சூழலையும் காப்பதற்காக அமைதியான முறையில் போராட்டம் நடத்திய மக்கள் மீது காவல்துறையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியிருப்பது ஆழ்ந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. போர்க்காலத்தில் காவல்துறையின் இனவாதச் செயற்பாடுகளை நினைவுபடுத்தும் வகையில் இது அமைந்துள்ளது.**

**காற்றாலை உபகரணங்களை எடுத்துச் சென்ற வாகனங்களை மக்கள் மறித்தபோது, காவல்துறை சட்ட ஒழுங்கு காக்கும் பெயரில் தாக்குதல் நடத்தி, பலரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இது வெறும் சட்ட அமலாக்க நடவடிக்கையாகக் கருதப்படமுடியாது; மாறாக இது அரச பயங்கரவாதத்தின் வெளிப்பாடு எனவே பார்க்கப்படுகின்றது.**

**இந்தநிகழ்வைவன்மையாகக்கண்டித்துள்ளதமிழ்த்தேசியமக்கள் முன்னணித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், 'மன்னாரில் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் மன்னார் தீவை முற்றுமுழுதாக அழிக்கக்கூடிய ஆபத்துக்கள்இருக்கின்றனஎன்பதைஉறுதிப்படுத்தக்கூடியதகவல்கள் உள்ளன. அதனாலேயே மன்னார் மக்கள் தமது இருப்பையும் தமது மண்ணையும் காப்பாற்றப் போராடுகின்றனர். ஆனால் ஏற்கனவே இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகச் சொல்லி, பெரும் வருமானம் கிடைக்கும் என்பதைக் காரணமாகக் காட்டி காற்றாலைத் திட்டத்தைத் தொடர ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது. மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களது இருப்பை அழிக்கும் திட்டங்களைத் தொடர்வதற்காக முடிவெடுத்து, அதற்கெதிராகப் போராடும் மக்கள்மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்படுவது அரச பயங்கரவாதமே தவிர வேறு எதுவுமில்லை' என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**அதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனவும், 'மன்னார் காற்றாலை விவகாரத்தில் ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் மதத் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது' என்று தெரிவித்துள்ளார். அவர்களின் இந்தக் கருத்துக்கள், இந்த விவகாரம் இன, கட்சி எல்லைகளைத் தாண்டி மக்கள் உரிமையை முன்னிறுத்தும் ஒரு பிரச்சினை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.**

**இன்று உலகம் முழுவதும் அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கைச் செல்வங்கள் அழிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல், கடல்சார் வளங்கள், நில வளங்கள் ஆகியவற்றை பாதுகாக்க மக்கள் எழுப்பும் குரலைக் கேட்காமல் அரசுகள் முன்னெடுக்கும் திட்டங்கள், எதிர்காலத்தில் மாபெரும் பேரழிவுகளுக்கு வழிவகுக்கும். மன்னார் காற்றாலைத் திட்டமும் கனிம மணல் அகழ்வுத் திட்டமும் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகவே கருதப்படுகின்றன. ஏனெனில், இத்திட்டங்கள் அப்பிரதேச மக்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, கடல்சார் உயிரியல் அமைப்பையும் முற்றுமுழுதாக பாதிக்கும் அபாயம் கொண்டவையாக உள்ளன.**

**இந்த சூழலில், மக்களின் குரலைக் கேட்பதற்குப் பதிலாக வன்முறையால் அடக்க முயல்வது ஒரு ஜனநாயக நாட்டிற்கு முற்றிலும் பொருந்தாதது. காவல்துறை மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய அமைப்பாகும். ஆனால் அந்த காவல்துறையே அரசின் அழுத்தத்திற்கிணங்க, மக்கள்மீது வன்முறை நடத்தும் கருவியாக மாறினால், அது ஜனநாயகத்தின் மீது நேரடி தாக்குதல் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.**

**மன்னாரில் நடந்த சம்பவம் வெறும் ஒரு உள்ளூர் பிரச்சினையாகக் கருதப்படக்கூடாது. இது, மக்களின் வாழ்வுரிமை மற்றும் நில உரிமைக்கு எதிரான தாக்குதலாக பார்க்கப்பட வேண்டும். இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, சர்வதேச அமைப்புகளின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியம். அபிவிருத்தி திட்டங்கள் மக்களின் ஒப்புதலின்றி முன்னெடுக்கப்படக் கூடாது என்பது ஜனநாயகத்தின் அடிப்படை விதி.**

**இப்போது கேள்வி ஒன்று மட்டுமே: அபிவிருத்தியா, மக்களின் அழிவா? மக்கள் இல்லாத அபிவிருத்தி திட்டங்கள் யாருக்காக? மன்னாரின் இயற்கை வளங்களையும் அதன் மக்களின் வாழ்வையும் பாதுகாப்பதே முதன்மையான கடமை.**

**எனவே, மன்னார் மக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பேற்க வேண்டியது அரசே. காவல்துறை நடவடிக்கைகள் குறித்து சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும். கைது செய்யப்பட்டோர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அதற்கு மேல், அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் வெளிப்படையான முறையில் மக்களுடன் கலந்துரையாடப்பட்டு மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும்.**

**மன்னாரின் மக்கள் போராடுவது தமது மண்ணிற்காக, தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக. அந்தக் குரல் அடக்கப்பட வேண்டிய குரல் அல்ல; கேட்கப்பட வேண்டிய குரல். அந்தக் குரலைக் கேட்க அரசும், அதிகாரிகளும் தயாராக இல்லை எனில், அது உண்மையிலேயே அரச பயங்கரவாதம் என்றே சொல்லப்பட வேண்டும்.**

# இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தலைவர் பற்றிய குற்றச்சாட்டுக்கள் பொய்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜேவிபியின் சட்ட பிரிவில் உறுப்பினராக பதவி வகித்ததாக குறிப்பிடப்படுவது முற்றிலும் பொய்யானது. இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக பணிப்பாளர் நாயகம் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வாரென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார. அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜேவிபியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக கட்சியில் இருந்து விலகியதன் பின்னர் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராகப் பேசுகிறார். அவர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்துள்ளார். அரசியல் கட்சிகளில் இணைந்துக்கொள்வது அடிப்படை உரிமையாகும். ஆகவே அவரது தனிப்பட்ட தீர்மானம் பற்றி ஏதும் குறிப்பிட போவதில்லை.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜேவிபியின் சட்டப் பிரிவில் உறுப்பினராக பதவி வகித்தார் என்று நந்தன குணதிலக குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது. நீதித்துறையின் சிரேஷ்டத்துவமிக்கவரான இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் மீது போலியான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இதற்கு எதிராக அவர் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச எனக்கு எதிராக அண்மையில் இழப்பீடு கேட்டுக் கடிதம் அனுப்பி வைத்திருந்தார். எனக்கு எதிராக அவர் வெகுவிரைவில் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும். இல்லையேல் அவருக்கு எதிராக நான் வழக்குத் தாக்கல் செய்வேன் - என்றார்.

# இந்தாண்டு பொலிஸாரினால் 51 லட்சம் பேரிடம் விசாரணை

பொலிஸாரால் இவ்வாண்டில் இதுவரையில் 51 இலட்சம் தனிநபர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 4630 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் எப்.யூ.வூட்லர் தெரிவித்தார்.

அவர் நேற்று விடுத்த அறிக்கையொன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 51 இலட்சம் தனிநபர்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அதற்கமைய 104 000 பேர் மேலதிக விசாரணைகளுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 4630 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை கைது செய்வது மாத்திரமின்றி வீதி விபத்துக்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளும் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் பிரதி பலனாக மதுபானம் அருந்தி வாகனங்களை செலுத்திய 46 909 சாரதிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், அதிக வேகத்தில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமை தொடர்பில் 3404 வழக்குகளை தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் பொலிஸாரால் தொடர்ந்தும் கண்காணிப்புக்கள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் சந்தேகநபர்கள் தொடர்பிலும் விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய இவ்வாண்டு 87 திட்டமிட்ட குற்றச் செயல்கள் இனங்காணப்பட்டு, அவற்றுடன் தொடர்புடைய 38 துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கிய 263 பேர் உள்ளிட்ட 328 சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சுற்றிவளைப்புக்களின் போது 61 டி56 ரக துப்பாக்கிகளையும், 62 பிஸ்டல் ரக துப்பாக்கிகளையும், 40 ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் உட்பட உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்ட 1721 துப்பாக்கிகள் இதுவரையில் கைப்பற்றப்பட்டுள்ளன. பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள மேலும் பல சந்தேகநபர்களும் விரைவில் கைது செய்யப்படுவர். அவ்வாறு இதுவரை 17 பேர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு; தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 30 சந்தேகநபர்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் இதுவரையான காலப்பகுதியில் பொலிஸ் சுற்றிவளைப்புக்களில் 955 கிலோ கிராம் ஹெரோயின், 1422 கிலோ கிராம் ஐஸ், 471 கிலோ கிராம் ஹஸீஸ், 29 கிலோ கிராம் கொக்கெயின், 13 773 கிலோ கிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல பொலிஸ் பிரிவில் மித்தெனிய பிரதேசத்தில் இரு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்களில் பெருந்தொகை போதைப்பொருட்களை கைப்பற்ற முடிந்தது. இவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக விரைவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய ஒற்றுமையைக் காப்பதே ஊடகவியலாளர்களின் கடமை

## அமைச்சரவைப் பேச்சாளர் அறிவுரை

தேசிய ஒற்றுமையை பாதுகாப்பதே ஊடகவியலாளர்களின் முதன்மைக் கடமையாகும். அவர்கள் இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக செயற்படவேண்டுமென சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு தபால் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் , தூதுவர்கள், அரச அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சமீபத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் பொதுமக்களின் வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளன. அவை தொடர்பில் ஆளும்தரப்பு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், ஊடகவியலாளர்கள் தங்கள் பொறுப்பை மேலும் உணர்ந்து செயல்பட வேண்டும். வெறும் தகவல் வெளியிடுவது மட்டுமல்ல ஊடகவியலாளர்களின் முதன்மைக் கடமை தேசிய ஒற்றுமையை பாதுகாப்பதேயாகும்.

இலங்கை பல தசாப்தங்களாக உள்நாட்டு மோதல்களாலும் வன்முறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் மனங்களில் இன்னும் அந்தக் காயங்கள் ஆறாமல் இருக்கின்றன. இத்தகைய சூழலில் சிறிய சம்பவங்களுக்குக் கூட பெரிய பிம்பம் அளித்து வெளிப்படுத்தினால் சமூகத்தில் பிளவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. எனவே ஊடகங்கள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும்

சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் இலாபத்திற்காக பல்வேறு திட்டங்களை முன்வைத்து செயற்படுகின்றன. ஆனால் ஊடகங்கள் அந்த அரசியல் வலைவீச்சுகளில் சிக்காமல், நாட்டின் நிலைத்தன்மை மற்றும் மக்கள் நலனுக்காக உண்மையை மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் செய்திகளை வெளிப்படுத்துவதே ஊடகத்துறையின் உண்மையான பணியாகும்.

சமூகத்தில் நிகழும் சிறிய சம்பவங்கள் கூட ஊடகத்தின் மூலம் மிகப்பெரிய செய்தியாக மாறுகின்றன. இத்தகைய செய்தி வெளிப்பாடுகள் இன, மத, கலாச்சார அடிப்படையில் மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் அபாயம் உண்டு. அதேவேளை அரசு செய்யும் தவறுகள் மறைக்கப்படாமல், உண்மைகள் சரியான முறையில் வெளிப்பட வேண்டும் என்பதும் ஊடகங்களின் கடமையாகும் .

இந்த நாட்டில் சிங்களர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என பல இன, மத, கலாசாரக் குழுக்கள் இணைந்து வாழ்கின்றனர். இந்த வேறுபாடுகள் காரணமாக பிரிவினை தோன்றாமல், அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தில் ஒன்றிணைய வேண்டியது அவசியம். பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தேசிய ஒற்றுமை அத்தியாவசியம் .

பொதுமக்களின் குரலை உலகிற்கு எடுத்துச் செல்லும் ஊடகத்துறை, சமூக அமைதியையும் ஒற்றுமையையும் காக்கும் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.குறிப்பாக முஸ்லிம் ஊடகவியலாளர்கள் தேசிய ஒற்றுமைக்ககக்கூடுதல் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டிய அவசியம்.

மேலும் ஒற்றுமை வார்த்தைகளில் மட்டும் அல்ல, செயலிலும் தேவை நாம் ஒவ்வொருவரும் வேறு மதம், இன, கலாசாரப் பின்னணியிலிருந்து வந்தாலும், வெறும் வார்த்தைகளில் ஒற்றுமை எனச் சொல்லிக் கொண்டிருக்காமல், நாட்டின் அபிவிருத்திக்காக நமது திறமைகளையும் பங்களிப்புகளையும் வழங்க வேண்டும். ஊடகவியலாளர்கள் ஒரு தொழில் முனைவோர் அல்ல; அவர்கள் தேசிய முன்னேற்றத்திற்கு பொறுப்பேற்கும் முக்கிய சக்தி ஆவர்.

ஒரு ஆளும்தரப்பு தவறு செய்தால் அது தொடர்பான உண்மையான தகவல்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும். அதேசமயம், தேவையற்ற பிளவுகள் ஏற்படாதபடி ஊடகங்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்படுவது மிக முக்கியம். இவ்வாறு செயற்பட்டால்தான் நாம் அனைவரும் இன, மத வேறுபாடுகளை மறந்து, ஒரே இலங்கையர்களென முன்னேற முடியும் - என்றார்.

# 8 வருடங்களில் மின்சார சபைக்கு ரூ. 6 லட்சம் மில்லியன் நட்டம்

2014 முதல் 2022ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை 594,368 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக கோப் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வுஜுளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் நடைமுறை செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை பரிசீலனை செய்வதற்காக கோப் குழுவின் தலைவர் நிஷாந்த சமரவீரவின் தலைமையில் குழு கடந்த வாரம் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடியது.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மின்சார சபையின் நட்டத்துக்கான பல காரணிகள் வெளிப்படுத்தப்பட்ட நிலையில்மின்சாரசபையில்போதுமானசேவையாளர்கள் உள்ளநிலையில்ஒருசிலகண்காணிப்புநடவடிக்கைகள் வெளியக தரப்பிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டமை நட்டத்துக்கான காரணிகளில் பிரதான ஒன்றாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சார சபை தொடர்ச்சியான நட்டமடைந்த நிலையில் 2022 ஆம் ஆண்டு மின்கட்டணம் ஒருகட்டமாக அதிகரித்ததால் பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டார்கள்.இருப்பினும் 2023 ஆம் ஆண்டுக்கு பின்னர் மின்சார சபை இலாபமடையும் நிலைக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தினசரி 18 மணித்தியாலங்கள் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது.மின்கட்டமைப்பின் சிக்கல்களினால் இவ்வாறு மின்விநியோகம் துண்டிக்கப்படவில்லை.இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு செலுத்த வேண்டிய கடனை உரிய காலப்பகுதியில் செலுத்ததாத காரணத்தால் மின்வியோகம் சிக்கலுக்குள்ளானது என்று அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் சுட்டிக்காட்டினார்கள்.

மின்கட்டணத்தை அதிகரித்து 24 மணித்தியாலங்களுக்கு மின்சாரத்தை தடையின்றி வழங்கியமை சந்தேகத்துக்குரியது என்று குழுவின் தலைவர் இதன்போது கேள்வியெழுப்பினார்.

# நிதி மோசடி, ஊழலுக்கு எதிரான சட்ட நடவடிக்கை குறித்த திருத்தம்

ஆளும்தரப்பு பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் வெளிவரும் பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது தொடர்பான நிலையியற் கட்டளையில் திருத்தத்தை மேற்கொள்வதற்கான தீர்மானம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஆளும்தரப்பு பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீரவினால்137ஆவதுநாடாளுமன்றநிலையியற்கட்டளைக்கு அமைய குறித்த குழு தொடர்பில் தற்பொழுது காணப்படும்120(4)நிலையியற்கட்டளையைத்திருத்தும் நோக்கிலேயேஇந்தத்தீர்மானம்முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும் போது பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிஸ்மா அதிபருக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய குறித்த தீர்மானத்தை ஆரய்வதற்காக நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும்.

# 12 இலங்கையரை நாட்டுக்கு திருப்பியனுப்பியது இஸ்ரேல்

இஸ்ரேலில் இருந்து அண்மையில் சுமார் 12 இலங்கையர்கள் மனநலப் பிரச்சினைகள் அல்லது போதைப்பொருள் பாவனைப் பிரச்சினைகள் காரணமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று, இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

மனநலப் பிரச்சினைகள் அல்லது போதைப்பொருள் பாவனைப் பிரச்சினைகள் உள்ளவர்களை வெளிநாட்டு வேலைக்காக அனுப்புவதைத் தவிர்க்குமாறு தொடர்புடைய குடும்பங்களை இலங்கைத் தூதரகம் வலியுறுத்துவதாகவும் தூதுவர் நிமல் பண்டார மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலில் கட்டுமான வேலைகளில் ஈடுபட்டிருந்த மற்றும் பொருத்தமற்ற நடத்தையை வெளிப்படுத்திய மேலும் இரு இலங்கையர்கள், கடந்த வியாழக்கிழமை இஸ்ரேலிலிருந்து கொழும்பிற்குத் நாடு கடத்தப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள தூதுவர் நிமல் பண்டார, அந்த இரண்டு இலங்கையர்களும் டுபாய் வழியாக நாட்டிற்கு அனுப்பப்பட்டதாகவும், அவர்களது குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரிலேயே நாடு கடத்தல் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒருவர் போதைப்பொருள் பாவனை காரணமாக வேலைக்குச் செல்லாமல் பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்ததாகவும், இரண்டாவது நபர் மன அழுத்தத்தால் தனது பணியிடத்திலிருந்து தப்பி ஓடி, வேலை இல்லாமல் அலைந்து திரிந்ததாகவும் அவர் மேலும் கூறினார். இவ்விருவரும் இஸ்ரேலில் உள்ள இலங்கை சமூகத்தின் உறுப்பினர்களால் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இருவரது கடவுச்சீட்டுகளும் தொலைந்து போனதால், தூதரகம் இலவசமாக இரண்டு தற்காலிக கடவுச்சீட்டுகளை வழங்கியதாக தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார். அவர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்தபோது அவர்களின் நலனைத் தூதரகம் உறுதி செய்ததாகவும், அவர்கள் புறப்படுவதற்காக விமான நிலையம் வரை அவர்களுடன் சென்றதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## ரணில்,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் இலங்கையின் சட்ட ரீதியான நடவடிக்கைகளைப்பலவந்தமாகக்காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்களின் குழு பாராட்டியது. எனினும், நீண்டகாலமாக நிலவும்வரலாற்று ரீதியான கவலைகள், சட்டச் சிக்கல்கள் மற்றும் நடைமுறைச் சவால்கள் குறித்து ஆழமான கேள்விகளை எழுப்பியது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்து 600 என்று இருந்தாலும், உண்மையில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கலாம் என்று சில மதிப்பீடுகள் தெரிவிப்பது குறித்துக் கவலை எழுப்பப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் ஒரு தொடர்ச்சியான குற்றம் என்ற தன்மையை குற்றவியல் நடைமுறைச் சட்டம் அல்லது புதிய சட்டம் அங்கீகரிக்கவில்லை என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் சுட்டிக்காட்டினர். 20 ஆண்டுகால காலாவதிச்சட்டம்எவ்வாறுநீதியைப்பாதிக்கும், பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டுவது எப்படி என்று பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர் கார்மென் ரோசா வில்லா குயின் டானா கேள்வி எழுப்பினார். புதிய வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோர் சட்டத்தில் 'போர்க் குற்றங்கள்' மற்றும் 'மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்' என்ற கருத்துக்கள் ஏன் சேர்க்கப்பட வில்லை? இந்தக் குற்றங்களை விசாரிக்க சிறப்புநீதிமன்றம் அமைக்கப்படுவது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்குகளில் ஒரு மேலதிகாரியின் உத்தரவை ஒரு பாதுகாப்பு முறையாகக் கொண்டு, குற்றமிழைத்த அதிகாரிக்குப் பொறுப்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா? இந்தச் சட்டம் உத்தரவிட்ட அல்லது தெரிந்திருந்த மேலதிகாரிகளின் பொறுப்பைப் பற்றிப் பேசுகின்றதா? என்று நிபுணர்கள் வினவினர். பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸாரின் காப்பகங்களை அணுகுவதில் ஒத்துழைப்பு இல்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை வழங்க அவர்கள் மறுக்கின்றனர் என்று வெளிவரும் அறிக்கைகள் குறித்தும் அவர்கள் கேள்வி எழுப்பினர். ஒத்துழைக்க மறுக்கும்படையினருக்குஎன்னதண்டனைகள் விதிக்கப்படுகின்ற என்றும் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குழுவின் நிபுணர்கள் கேள்வி எழுப்பினர்.

நிபுணர்களின்கேள்விகளுக்குப்பதிலளித்த இலங்கைத் தூதுக்குழு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களைக் கையாளும் சட்ட அமைப்பு, நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்துவதாக அறிவித்தது. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான 2018 சட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. இதற்கு இணையாக இழப்பீட்டுச் சட்டம், காணாமல்போனோர்அலுவலகச்சட்டம்மற்றும் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் மேலதிகாரியின் உத்தரவை ஒரு குற்றவியல் பொறுப்பு விலக்காக ஏற்க முடியாது என்பதைச் சட்டம் தெளிவாக நிராகரித்துள்ளது என்று தெரிவித்தது.

மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புகளின் தகவல் தொடர்பு நடைமுறைகள் தொடர்பான அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் ஒரு வழக்கு அடுத்த வாரம் உயர் நீதிமன் றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது. காணாமல்போனோர் அலுவலகத்திடம் சுமார் 23,300 காணாமல் போனோர் வழக்குகள் உள்ளன. இதில் 3 ஆயிரத்து 700 படையினர் மற்றும் சுமார் 16 ஆயிரம் பொதுமக்கள் அடங்குவர். காணாமல்போனவர்களில் சுமார் 93 சதவீதமானோர் ஆண்கள் என்றும், 33 சதவீதமானோர் 19 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள். கொலை அல்லது தேசத்துரோகக் குற்றங்களுக்கு குற்றவியல் நடை முறைக் கோட்டில் காலாவதி வரம்பு இல்லை. வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் போன்ற சில குற்றங்களைத் தொடர்ச்சியான மீறல்கள் என உயர் நீதிமன்றம் ஏற்கனவே விளக்கமளித்துள்ளது. பொலிஸாருக்குஎதிராகச் சித்திரவதைக்குற்றச்சாட்டுகள்இருந்தால், அந்த அதிகாரிகள் விசாரணைகளில் பங்கேற்கச் சட்டமா அதிபர் அனுமதி வழங்கமாட்டார் என்றும்அறிவித்துள்ளது. 2008இல்கடற்படை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது. சட்டமா அதிபர் அனைத்து வழக்குகளையும் சுதந்திரமான முறையில் நடத்துவதாகவும் இலங்கை தூதுக் குழு தெரிவித்தது.

மனிதப் புதைகுழிகள் தொடர்பான அனைத்துவிசாரணைகளும்நீதித்துறையின் மேற்பார்வையின் கீழ், சட்டத் தரங்களின்படி நடைபெறுகின்றன. சர்வதேசபங்காளிகளுடன் இணைந்து தடயவியல் விசாரணைகளை மேற் கொள்வதற்கும், குடும்பங்கள் மற்றும் தகுதிவாய்ந்தநிபுணர்களைச்செயல்முறையில் சேர்ப்பதற்கும் அரசு செயற்படுவதாகவும் இலங்கை தூதுக் குழு அறிவித்தது

## போக்குவரத்துச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் ஜப்பானின் ஒசாகா நகரில் உள்ளகன்சாய்சர்வதேசவிமானநிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசொமதா ஜப்பானுக்கான இலங்கைத்தூதுவர்பேராசிரியர்பிவிதுருஜனக் குமாரசிங்கமற்றும்ஜப்பான்அயலுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகள் ஆகியோர் அரசுத் தலைவரை வரவேற்றனர்.

அரசுத் தலைவர் செப்டெம்பர் 30 வரை ஜப்பானில் தங்கியிருந்து இரு தரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார். ஜப்பானின் ஒசாகா நகரில் நடைபெறவுள்ள 'எக்ஸ்போ இலங்கை தினம்' நிகழ்வில் அரசுத் தலைவர் அநுரகுமார பிரதம அதிதியாக கலந்துகொண்டார். இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகமும் ஜப்பானில் உள்ள இலங்கை தூதரகமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

அரசுத் தலைவர் அநுரகுமார இந்தப் பயணத்தின்போது ஜப்பான் பேரரசர் நருஹிட்டோவைசந்திக்கஉள்ளதுடன்,ஜப்பான் பிரதமர் ஷிகெரு இஷிபா மற்றும் ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர், அயலுறவுத்துறை அமைச்சர், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் உள்ளிட்ட பல முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து, இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார். மேலும், இலங்கை மற்றும் ஜப்பான் வர்த்தக சபைகள் இணைந்துடோக்கியோவில்ஏற்பாடுசெய்துள்ள இலங்கை முதலீட்டு மன்றத்திலும் அரசுத் தலைவர் பங்கேற்பார்.

இந்தப் பயணத்தில் அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும்அயலுறவுத்துறைஅமைச்சின்சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

## 77 ஆண்டுகளாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சிவஞானம், பொதுச்செயலா ளர் சுமந்திரன், திருகோணமலை மாநகரசபை மேயர் செல்வராஜா மற்றும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள். பொதுமக்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

சர்வஜன நீதி அமைப்பின் அமைப் பாளர் சட்டத்தரணி பவானி பொன்சேகா, நிகழ்வில் மருத்துவர் மனோகரனின் நீதிக்கான போராட்டத்தின் படிமுறைகளை விளக்கி உரையாற்றினார். அதனை அடுத்து இந்த மாணவர் படுகொலைகள் தொடர்பில் அக்காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டவரான சுமந்திரன் உட்படப் பலர் உரையாற்றினர்.

முன்னதாகமருத்துவர்மனோகரனுக்கான நினைவுதின நிகழ்வு நேற்று மாலை திருகோணமலையில் இடம்பெற்றது. திருகோணமலை கடற்கரையில் 2006ஆம் ஆண்டு ஜனவரி 2 மாணவர்கள் படுகொலைசெய்யப்பட்ட அதேயிடத்தில் இந்த அஞ்சலி இடம்பெற்றது.

படுகொலைசெய்யப்பட்ட 5 மாணவர்களில் மருத்துவர் மனோகரனின் மகனும் ஒருவர். குறித்த படுகொலைக்கான நீதியைக் கோரி சர்வதேச ரீதியிலும் போராடி வந்த வைத்தியர் மனோகரன் வயது மூப்பின் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அவருக்கு அஞ்சலி செலுத்திய இந்த நிகழ்வில்மனிதஉரிமைச்செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள், பொது மக்கள் மற்றும்தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன், தலைவர் சிவஞானம் மற்றும் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர

## பல கட்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கருத்திட்டத்தில் இருந்து விலகுவதாக தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் வடக்கு மாகாண மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

இந்த கருத்திட்டத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என்று சுற்றுச்சூழலியலாளர்கள் மற்றும் சிவில் தரப்பினர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள். இலங்கையின் மிகபெரிய தீவாகக் கருதப்படும் மன்னார் தீவின் இயற்கை அம்சங்களை பாதுகாக்க வேண்டும்.

மன்னார் காற்றாலை கருத்திட்டத்தை மீள ஆரம்பிப்பது தொடர்பில் வெளிப்படையான வகையில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதாக அரசுத் தலைவர் குறிப்பிட்டார். ஆனால் எவ்விதமான பேச்சுக்களுமின்றி கருத்திட்டத்தின் பணிகள் மீள தொடங்கப்பட்டுள்ளன.

மன்னார் காற்றாலை விவகாரத்தில் ஆளும்தரப்பு முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்களின் கருத்துகளுக்குமதிப்பளிக்காமல்போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள்மற்றும்மதத்தலைவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமை வன்மையாக கண்டித்தக்கது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆளும்தரப்பிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்கும் போது காலம் கடத்தப்படுகிறதே தவிர உறுதியான பதிலேதும் கிடைப்பதில்லை. ஜேவிபியின் தலைமைப் பணியகம் தயாரிக்கும்வரைவினை புதிய அரசமைப்பாக அறிமுகப்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு ஆளும்தரப்பு எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அரசியல் உரிமைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆளும்தரப்பு வழங்கிய வாக்குறுதி போலியாகக்கூடாது. யாப்புருவாக்கத்துக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை ஆளும்தரப்பு சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார்.

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு தற்போது போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனையால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் கடத்தப்படுவது மாத்திரமின்றி உள்நாட்டிலும் போதைப்பொருளி தயாரிக்கப்படுவது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த அபாயத்திலிருந்து எதிர்கால சந்ததியினரான சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியது பெற்றோரின் ஒரு கடமையும் பொறுப்புமாகும்.

எதிர்வரும் ஓரிரு வாரங்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அதை ஆளும்தரப்பின் சிறந்த வேலைத்திட்டமாக முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஓரிரு வருடங்களை போதைப்பொருள்

# பொலிஸ் பரிசோதகர்கள் உயர் நீதிமன்றத்தில் மனு

உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வுக்காக சமீபத்தில் நடைபெற்ற பரீட்சையில் கலந்துகொண்டவர்களில் 45 பேர் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்வு பெற்றதால், தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் கூறி, 170 பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் உயர் நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுக்களில், பொலிஸ்மா அதிபர், பதவி உயர்வு பெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரிய தாக்கல் செய்த மனுக்களில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவி உயர்வுக்காக நடத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில், கடந்த 25 ஆம் திகதி 45 பேர் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களாகப் பதவி உயர்வு பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையின் ஒரு வினாத்தாள் கசிந்ததாகவும், பரீட்சை முடிவுகள் தாமதமாக வெளியிடப்பட்டதாகவும், இது திட்டமிடப்பட்ட செயல் எனவும் மனுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு மூப்பு அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இந்தப் பரீட்சையில் தொழில்முறைத் தகுதிகளை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், கல்வித் தகுதி மட்டுமே அடிப்படையாகக் கொள்ளப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

மேலும், பரீட்சையில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததாகவும் மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, தங்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், தொடர்புடைய பரீட்சை முடிவுகளைச் செல்லாததாக்கி உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

# ராஜித சேனாரத்ன மீதான குற்றப்பத்திரிகை தயார்

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகற்றும் பணியை கொரிய நிறுவனத்திற்கு ஒப்படைத்ததால் ஆளும்தரப்பிற்கு 2.6 மில்லியன் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுத்தியதாக கூறி, முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாக நேற்று (26) கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அறிவித்தது.

இந்த வழக்கு வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, விசாரணைகள் முடிவடைந்த பின்னர், சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் மீன்பிடி துறைமுகக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு 2026 ஜனவரி 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்






# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2025இல் வெளியிடப்பெற்றது